தமிழ்நாடு அரசு

# இந்து சமய அறநிலையத்துறை

## உதவி ஆணையர் அலுவலகம், திருவாரூர்.

## வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு

கட்டு எண்.5230/2020/அ2 நாள்: 29.04.2022

திருவாரூர் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலக தனி வட்டாச்சியர் பணியிடத்திற்கான அலுவலக உதவியாளர் பணியிடம் மற்றும் இவ்வலுவலகத்துடன் இணைந்த சரக ஆய்வாளர் பணியிடங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும். பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| பணியின் பெயர் | அலுவலக உதவியாளர் | |
|---|---|---|
| பணியிடம் | உதவி ஆணையர் அலுவலகம், திருவாரூர். | |
| சம்பள விகிதம் | ஊதியநிலை–1<br>ஊதிய விகிதம் ரூ.15,700/– ரூ.50,000/– | |
| குறைந்தபட்ச கல்வித்தகுதி | 8–ம் வகுப்பு தேர்ச்சி | காலியிடங்கள் |
| இட ஒதுக்கீடு (காலி பணியிடங்கள்–4) | 1) பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவர் (General Priority) | 1 |
| | 2) ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) முன்னுரிமை பெற்றவர் பெண்கள் SC(A)(W)(Priority) | 1 |
| | 3) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் முன்னுரிமை பெற்றவர் (Most Backward Classes and Denotified Communities (Priority) | 1 |
| | 4) பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் முன்னுரிமை பெற்றவர் (Backward Classes (Priority) | 1 |
| **மொத்த பணியிடங்கள்** | | **4** |

| 01.07.2021–ல் வயது வரம்பு | GT | SC, ST | MBC, DNC | BC |
|---|---|---|---|---|
| அதிக பட்ச வயது | 32 | 37 | 34 | 34 |
| குறைந்தபட்ச வயது | 18 | 18 | 18 | 18 |

### முன்னுரிமை

**அரசாணை (நிலை) எண்.122 மனித வள மேலாண்மைத் (கே2) துறை. நாள்: 02.11.2021–ன்படி**

1. GT Priority –கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) அரசாரணை நிலை எண்.08 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை (ஆர்) நாள்:10.01.2000ல் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமை இவ்வினத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. (Heirs (Sons/ Daughters) who have lost both father and mother)
2. SC (A) (W) Priority முதல் தலைமுறை பட்டதாரிகள்.
3. MBC & DNC GL Priority தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள்.
4. BC GL Priority போரில் உடல் தகுதியினை இழந்த முன்னாள் இராணுவத்தினர் (அரசாணை நிலை எண்.134 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை (ஆர்) நாள்: 10.01.1990–ல் வழங்கப்பட்ட முன்னுரிமை)

மேற்கூறிய தகுதியுள்ள இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் 30.05.2022 மாலை 5.45 மணிக்குள் கீழ்காணும் ஆவணங்களின் நகல்களில் சான்றிட்டும், புகைப்படத்துடன் சுயவிலாசமிட்ட ரூ.25/–க்கான தபால் தலை ஒட்டிய கவர் ஒன்றுடன் கீழ்கண்ட முகவரிக்கு உரிய விண்ணபத்தில் பூர்த்தி செய்து விண்ணபிக்க வேண்டும். இருப்பிட முகவரி, அஞ்சல் குறியீட்டு எண். கைபேசி எண் ஆகியவற்றை தெளிவாகவும், அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர் விண்ணபக்கவரில் அலுவலக உதவியாளர் பணியிடம் என்று குறிப்பிட்டு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குள் வரப்பெறாத விண்ணபங்கள் மற்றும் தகுதியில்லாத விண்ணபங்கள் நிராகரிக்கப்படும்.

### அனுப்ப வேண்டிய விபரங்கள்:

1. விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி. (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)
2. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான கல்வி சான்று நகல்.
3. மாற்று சான்று நகல்.
4. சாதி சான்று நகல்.
5. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பின் பதிவு எண். பதிவு சான்றின் நகல்.
6. குடும்ப அடையாள அட்டை நகல்.
7. ஆதார் அட்டை நகல்.
8. முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certifcate)
9. இதர தகுதிகள் ஏதுமிருப்பின் அதன் விபரம் மற்றும் நகல்கள்.
10. சுயவிலாசமிட்டு தபால் தலையுடன் கூடிய உறை–1.

குறிப்பு: விண்ணப்பப்படிவத்தினை hrce.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அலுவலக வேலை நேரத்தில் இவ்வலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

### விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய (முகவரி)

**உதவி ஆணையர்**
**இந்துசமய அறநிலையத்துறை**
**2, புதுத்தெரு, மயிலாடுதுறை சாலை, திருவாரூர்– 610 001.**

**ஓம்/இரா.ஹரிஹரன்,** எம்.ஏ.,எல்.எல்.பி.,
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
திருவாரூர்.

வெ.ஆணைஎண்.34/விளம்பரம்/செமிதொ.அ/திருவாரூர்/
நாள்:30.04.2022